# ***தோழர் K.G.போஸ் நினைவு நாள்- டிசம்பர்-11***



தோழர் K.G.போஸ் மறைந்து இன்றோடு 40 வருடங்கள் கடந்து விட்டன. 1974ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி தனது 53 ஆவது வயதில் தோழர் K.G.போஸ் லண்டன் மருத்துவமனையில் காலமானார்.

ஆனால் அவரது வாழ்நாளில் தபால் தந்தி தொழிற்சங்க இயக்கத்திற்கு அவர் ஆற்றிய பங்கு மகத்தானது. 1921 ஜூலை 7ஆம் தேதி பிறந்த தோழர் K.G.போஸ் தனது 20ஆவது வயதில் கொல்கொத்தா DET அலுவலகத்தில் எழுத்தராக பணிக்கு சேர்ந்தார். பணியில் சேர்ந்த நாள் துவங்கி அவரது இறக்கும் நாள் வரை அவர் தொழிற்சங்க பணிகளில் ஈடுபட்டிருந்தார். நாடு முழுவதும் இருந்த ஆயிரக்கணக்கான அர்ப்பணிப்புடன் பணியாற்றும் தோழர்களுக்கு வழிகாட்டி முன்னணியில் இருந்து பணியாற்றினார். ஆங்கிலேய அரசுக்கு எதிரான 1946ஆம் வருடம் நடைபெற்ற தபால் தந்தி போராட்டம், 1954ஆம் ஆண்டில் NFPTE உருவாக்கம், திருத்தல்வாத தலைமையினை அம்பலப்படுத்தி தொழிலாளர்களை சரியான வழியில் கொண்டு சென்றது உள்ளிட்ட அனைத்திலும் அவரது பாத்திரம் அனைவருக்கும் தெளிவாக தெரியும். பல்லாயிரக்கணக்கான் இளைஞர்கள் அவரது செயல்பாட்டால் ஈர்க்கப்பட்டு தொழிற்சங்கத்தில் துடிப்புடன் செயல்பட துவங்கினார்கள்.

K.G.போஸ் ஒரு போராளி,ஒரு புரட்சியாளர். தொழிலாளர்களின் அபிலாஷைகளையும், திறமைகளையும் அவர்களோடு ஒன்றாக கலந்து அறிந்து உறுதியான போராளிகளாக அவர்களை செம்மைப்படுத்திய அற்புதமானதொரு தலைவர். 1970 ஆம் ஆண்டு NFPTE சம்மேளனத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் இயக்கத்தை சரியான திசை வழியில் கொண்டு சென்றார். வங்காள சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் அம்மாநில அரசு ஊழியர்களின் ஊதியக் குழுவில் உறுப்பினராகவும் செயல்பட்டார்.

அவர் கொடிய புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவதற்கான லண்டன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மிகச்சிறந்த சிகிச்சை அவருக்கு கொடுக்கப்பட்ட போதும், அந்த நோயிலிருந்து மீள முடியாமல் பல்லாயிரக்கணக்கான தபால் தந்தி தொழிலாளர்களை துக்கத்தில் ஆழ்த்திவிட்டு 1974 ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி மரணமடைந்தார்.

**“நான் உயிருடன் இருக்க விரும்புகிறேன். அனைத்து அநீதிகளுக்கும் எதிராக சமரசமற்ற எனது போராட்டத்தை தொடர விரும்புகிறேன். இந்த போராட்டத்தில் நான் தனிமனிதன் அல்ல. என்னுடன் ஆயிரமாயிரம் தோழர்கள் உள்ளனர்.** அவர்களே என் உத்வேகத்தின் ஜீவ ஊற்றுக்கள்!” **என்றும் “சாதாரன தொழிலாளர்களின் கொள்கை பூர்வமான நிலைபாட்டினை அடகு வைப்பதாக கருதப்படும் எந்த ஒரு முன்மொழிவிலும் நாம் பங்குதாரராக இருக்கக் கூடாது” என்பன அவர் இந்திய நாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கு எழுதிய இறுதிக் கடிதத்தின் உள்ள ஒரு சில பகுதிகள்.**

**அவர் காட்டிய திசை வழியில் நாம் நமது பயணத்தை தொடர உறுதி ஏற்போம்**

**இன்குலாப் ஜிந்தாபாத்!** **தோழர் K.G.போஸ் ஜிந்தாபாத்!!!**